DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 241/2024** |
| Deposition of Witness for | : | PW 1 |
| Name | : | பாப்பா |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 13.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th June 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் சின்னகோவிலான்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். 10 வருடத்திற்கு முன்பு ஒருநாள் ஆனிமாதம் 4ம் தேதி இரவு வீட்டைப்பூட்டிவிட்டு வடக்குபக்கம் ரூமில் நானும், எனது பசங்க இருவர் துாங்கிக்கொண்டிருந்தோம். தெற்குபக்கத்தில் உள்ள ரூமில் பீரோவில் நகைகளை வைத்திருந்தோம். காலையில் எழுந்து பார்த்தபோது வீடு திறந்துகிடந்தது. ரூமிற்குள் சென்றுபார்த்தபோது பீரோ திறந்துகிடந்தது. பீரோவில் 50கிராம் செயின் 1, 40 கிராம் செயின் 1, 16 கிராம் செயின் 1, 35 கி எடை உள்ள இரட்டைவடை செயின்–1, தலா 8 கிராம் எடை கொண்ட 2 வளையல்கள், 4 கிராம் எடை உள்ள ஒரு ஜோடி கம்மல், 5 கி எடை உள்ள மோதிரம்–1, 4 கி எடை உள்ள கல்மோதிராம்–1 மற்றும் ரூ.80000 காணவில்லை. அக்கம்பக்கம் விசாரித்து பார்த்தபிறகு காவல்நிலையத்தில் சென்று புகார்

கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 2 வருடம் கழித்து போலீசார் எதிரியை பிடித்து 100 கிராம் நகைள் மட்டும் கண்டுபிடித்துக் கொடுத்தார்கள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலீசார் எனக்கு நகைகளை மீட்டு கொடுத்ததை நான் நீதிமன்றத்தில் மனு செய்து திரும்பபெற்றுக்கொண்டேன். **அதற்கான புகைப்படம் 4 எண்ணம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 40 கிராம் எடையுள்ள கோதுமை கட்டிங் செயின்–1 சா.பொ. 1 ஆகும். 35 கிராம் எடையுள்ள ரெட்டைவட மயில்முகப்பு செயின் –1 சா.பொ.2 ஆகவும், சுமார் 16 கி எடையுள்ள Latest மைனர் மாடல் செயின்–1 சா.பொ.3 ஆகவும், 4 கி எடையுள்ள கல்மோதிரம் –1 சா.பொ.4 ஆகவும், 5 கி எடையுள்ள CKP என பொறிக்கப்பட்ட மோதிரம் –1 சா.பொ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 4 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்கத்தெரியும். நான்தான் காவல்நிலையம் சென்று புகார் மனு அளித்தேன். காவல்நிலையத்தில் இருந்த காவல்துறையினர் புகார் மனுவை எழுதிக்கொடுத்தார்கள். புகார் மனுவில் நான் கையெழுத்திட்டேன். யார் எழுதிக்கொடுத்தார் என்று குறிப்பாக எனக்கு தெரியாது.

புகார் மனுவில் உள்ள விபரங்களை நான் படித்துப்பார்க்கவில்லை. புகார் மனுவில் கையெழுத்து மட்டும் போட்டேன். நான் கொடுத்த புகார் மனுவில் திருட்டுபோன நகைகளின் கிராம் கணக்கு மற்றும் அவற்றின் மாடல்களை குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி திருட்டுபோன நகைகளுக்கான ரசீது ஏதேனும் காவல்நிலையத்தில் நான் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. சுமார் 170 கி தங்க நகைகள் திருடுபோயிருந்தன. நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எவ்வளவு கிராம் நகைகளை

பெற்றுக்கொண்டேன் என்றால் 100 கிராம் நகைகளை மட்டும் பெற்றுக்கொண்டேன்.

சம்பவம் நடந்த மறுநாள் காலையில் திருடுப்போயிருப்பது தெரியவந்தவுடன் காவல்நிலையத்தில் புகார் செய்தேன். எனது வீட்டிலிருந்து காவல்நிலையத்திற்கு 10 நிமிடங்களில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று இரவு எனது வீட்டில் நான், எனது கணவர் மற்றும் எனது இருமகன்கள் இருந்தோம் என்றால் சரிதான். எனது மகன்களுக்கு தற்போது 30, 33 வயது இருக்கும். சம்பவம் நடந்த சமயத்தில் அவர்களுக்கு 20,23 வயது இருக்கும். சம்பவ நாள் இரவு அன்று எத்தனை மணிக்கு திருட்டு ஏற்பட்டது என்று எனக்கு குறிப்பிட்டு தெரியுமா என்றால் என்னால் குறிப்பிட்டு கூறஇயலாது. நான் கூறிய நாள் நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்து அதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நகைகளை வைத்திருந்த பீரோ உடைக்கப்படவில்லை என்றால் சரிதான். சாவியை பயன்படுத்தி நகைகள் திருடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 241/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : கிருஷ்ணகுமார் |
| Father's Name | : சிதம்பரபாண்டியன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th June 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் சின்னகோவிலான்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பாப்பா எனது அம்மா. 18.05.2015 ம் தேதி இரவு சுமார் 10 மணிக்கு எனதுஅம்மா, தம்பி மற்றும் நான் ஆகியோர் எனது வீட்டின் வடக்கு பக்கம் உள்ள அறையில் தூங்கிக்கொண்டிருந்தோம். காலையில் எழுந்து எனது அம்மா தெற்குபக்கம் உள்ள அறையை பார்த்தபோது தெற்குப்பக்கம் உள்ள அறை திறந்துகிடந்தது. பீரோ திறந்துகிடந்தது. அதன்பின்னர் எனது அம்மா நகையையும், பணத்தையும் காணவில்லை என்று சொல்லி என்னையும்,எனது தம்பியையும் கூட்டி காண்பித்தார். எனது அப்பா எங்கள் ஊரில் உள்ள மற்றொரு வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தார். எனது அப்பாவிற்கு திருட்டுபற்றி தகவல் சொன்னோம். 50 கிராம் இரட்டைமாலை செயின், 40 கி இரட்டைவட செயின், 35 கிராம் மைனர்செயின், 16 கி எடை

உள்ள 2 வளையல்கள், 4 கி எடை உள்ள 2 கம்மல், 2 மோதிரங்கள், நகைகளின் மொத்தமதிப்பு சுமார் ரூ.200000 லட்சம் இருக்கும். பணம் ரூ.80000 காணவில்லை. அ.சா.1 எனது அம்மா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**</u>

நான் EEE.Diploma படித்துள்ளேன். புகார் அளிப்பதற்கு என் அம்மா சென்றபோது நானும் உடன் சென்றிருந்தேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் புகார் மனுவை நானே எழுதிக்கொடுக்காததற்கு காரணம் ஏதேனும் உண்டா என்றால் அந்த சமயத்தில் எனக்கு பதட்டமாக இருந்தது. அதனால் புகார் மனு எழுதிக் கொடுக்கமுடியவில்லை. காலை சுமார் 5.30 மணியளவில் நகைகள் திருட்டுபோனதை கண்டுபிடித்தோம். எனது வீட்டிலிருந்து காவல்நிலையத்திற்கு 10 நிமிடஙகளில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். நான் புகார் மனுவை அளித்த அன்று சுமார் காலை 6.30 மணியளவில் போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். நான் கூறுவதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நகைகளுக்காக ஆசைப்பட்டு இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 241/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : பார்த்திபன் |
| Father's Name | : சிதம்பரபாண்டியன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.06.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th June 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல்விசாரணை:</u>**

நான் சின்னகோவிலான்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சுயதொழில் செய்து வருகிறேன். அ.சா.1 பாப்பா எனது அம்மா. 18.06.2015 ம் தேதி இரவு சுமார் 10 மணிக்கு நான், எனது அம்மா, அண்ணன் ஆகியோர்கள் எனது வீட்டின் வடக்கு பக்கம் உள்ள அறையில் துாங்கிக்கொண்டிருந்தோம். காலையில் சுமார் 5.30 மணியளவில் எழுந்து எனது அம்மா தெற்குபக்கம் உள்ள அறையை பார்த்தபோது தெற்குப்பக்கம் உள்ள அறை திறந்துகிடந்தது. பீரோ திறந்துகிடந்தது. அதன்பின்னர் எனது அம்மா நகையையும், பணத்தையும் காணவில்லை என்று சொல்லி என்னையும், எனது அண்ணனையையும் கூட்டி காண்பித்தார். அக்கம் பக்கம் விசாரித்தோம். எனது அப்பா எங்கள் ஊரில் உள்ள மற்றொரு வீட்டில் துாங்கிக்கொண்டிருந்தார். எனது அப்பாவிற்கு திருட்டுபற்றி தகவல் சொன்னோம். 50 கிராம் இரட்டைமாலை செயின், 40 கிராம் கோதுமை

செயின், 35 கிராம் இரட்டைவடை செயின், 16 கி எடையுள்ள மைனர் செயின், 16 கிராம் எடையுள்ள 2 வளையல்கள், 4 கிராம் கல் மோதிரம் ஒன்று, 5 கிராம் எடையுள்ள மோதிரம் ஒன்று, 4 கிராம் எடையுள்ள கம்மல் ஒரு செட், நகைகளின் மொத்தமதிப்பு சுமார் ரூ.200000 லட்சம் இருக்கும். பணம் ரூ.80000 காணவில்லை. அ.சா.1 எனது அம்மா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் பி.காம். படித்துள்ளேன். எனது வீட்டிற்கு ஒரே வாசல்தான் உள்ளது. எனது வீட்டின் தலைவாசல் வடக்குபக்கம் உள்ள அறைக்கு அருகில் உள்ளதா அல்லது தெற்குபக்கம் உள்ள அறைக்கு அருகில் உள்ளதா என்றால் அந்த வாசல் இருஅறைகளுக்கும் மத்தியில் உள்ளது. சம்பவம் நடந்த மறுநாள் காலையில் நாங்கள் பார்த்தபோது தலைவாசல் கதவு உடைக்கப்பட்டிருந்த நிலையில் உள்ளதா என்றால் கதவு உடைக்கப்பட்ட நிலையில் இல்லை. கதவு திறந்த நிலையில்தான் இருந்தது. சம்பவம் நடந்த மறுநாள் காலை 5.30 மணிக்கு எனது அம்மா எங்களை எழுப்பினார்கள். அதன்பிறகு நகை காணாமல் போனது குறித்து அக்கம் பக்கம் விசாரித்து காலை 6.30 க்கு நிலையம் சென்று புகார் மனு அளித்தோம். நான் கூறுவதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.